சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை– ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து கட்டடத்தை ₹ 20.00 இலட்சம் செலவில் மறுசீரமைப்பதற்கு நிர்வாக ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–7(2) துறை

அரசாணை (நிலை) எண்.35

நாள் 29.02.2016
திருவள்ளுவராண்டு 2047
மன்மத, மாசி 17
படிக்கப்பட்டது

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரின் கடித ந.க.எண்.12872/இ2-3/2014, நாள் 12.08.2015.

-----------

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர், தமிழகத்தில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 434 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் 203 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், மீதமுள்ளவை வாடகை கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. சொந்தக் கட்டடங்கள் அனைத்தும் உலக வங்கி நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டவையாகும். 2004–2005–ஆம் ஆண்டில், வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகமும் உலக வங்கி நிதியிலிருந்து ₹ 5,00,000 செலவில், மாவட்ட கட்டட மையம் வாயிலாக கட்டப்பட்ட அரசு கட்டடமாகும். இக்கட்டடத்திற்கு பராமரிப்பு செலவினம் எதுவும் இதுநாள்வரை மேற்கொள்ளப்படவில்லை. 11 ஆண்டுகளாக அரசு கட்டடத்தில் செயல்பட்டு வரும் வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலக கட்டடத்தின் அனைத்து சுவர்களிலும் விரிசல் ஏற்பட்டு தற்போது இடிந்து விழும் நிலையில் உள்ளது என்றும், கட்டடத்தின் மேற்கூரைகளில் விரிசல் ஏற்பட்டுள்ளதால் மழைக் காலங்களில் நீர் கசிவு ஏற்படுவதாகவும், ஜன்னல் மற்றும் கதவுகள் துருப்பிடித்த நிலையில் உள்ளதால், பாதுகாப்பற்ற சூழ்நிலையாக உள்ளதால், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலக கட்டடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்து கட்டடத்தை முற்றிலும் மறுசீரமைக்க வேண்டும் என்றும், பாதுகாப்பு கருதி வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் தற்போது தனியார் வாடகைக் கட்டடத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலக கட்டடங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்வதற்கான வழிவகைகள் ஏதுமில்லை என்றும் தெரிவித்துள்ளார். பொதுப்பணித்துறை செயற் பொறியாளர்,

பழுதடைந்த வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலக கட்டடத்தை மறுசீரமைப்பதற்கு தோராயமாக ₹ 20.00 இலட்சம் வரை செலவினமாகும் என்று தெரிவித்துள்ளார். அதற்குரிய செலவினப் பட்டியலையும் பொதுப் பணித்துறை செயற்பொறியாளரிடம் பெற்று இணைக்கப்பட்டுள்ளது. எனவே, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர், விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து கட்டடத்தை மறுசீரமைப்பதற்கு ₹ 20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரின் கருத்துருவினை பரிசிலினை செய்து அதனை ஏற்று விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து கட்டடத்தை மறுசீரமைப்பதற்கு ₹ 20.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேற்கண்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

> “2059-பொதுப்பணிகள். 01–அலுவலக கட்டடங்கள் 053–பராமரிப்பு மற்றும் செப்பனிடுதல். I–திட்டத்தில் சேராதது. CO–கட்டடங்கள்–தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம். 18–பராமரிப்பு. 02–சிறப்பு பராமரிப்பு”. (த.தொ.கு.2059–01–053–CO1826)

4. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா. எண்.15432A/நிதி (சந)/2016, நாள் 29.02.2016–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் (முகூபொ)
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–600 113.
மாவட்ட திட்ட அலுவலர்/குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்,
விருதுநகர் மாவட்டம் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் வழியாக)
மாவட்ட கருவூல அலுவலர், விருதுநகர் மாவட்டம்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், விருதுநகர் மாவட்டம்.
மாநில கணக்காயர், சென்னை – 600 018
மாநில கணக்காயர் (தணிக்கை I/II), சென்னை – 600 018
இருப்பிட கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை– 600 009.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமை செயலகம், சென்னை– 600 009
நிதி (சந/வரவு – I/II) தலைமை செயலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) பொ.ப) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

மாண்புமிகு அமைச்சர் (சந (ம) சதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
இருப்பிட கணக்கு அலுவலர், (சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந2) துறையின் வழியாக) சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சந2) த்துறை, சென்னை –600 009
இருப்பு கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஆர். எம். சுர்விழி 29/02/2016
பிரிவு அலுவலர்.